උත්තර පත්‍ර පරීක්ෂකවරුන්ගේ
ප්‍රයෝජනය සඳහා පමණි

94229

OL/2024(2025)/33/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

33 | T | I

# අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
# General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ඉතිහාසය I
வரலாறு I
History I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hour

**அறிவுறுத்தல்கள் :**

✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

✳ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பின்வருவனவற்றுள் புராதன இலங்கையில் வர்த்தகம் மற்றும் உலோகக் கைத்தொழில் பற்றிக் கற்கும் போது முக்கிய மூலாதாரமாக இருப்பது எது?
(1) கல்வெட்டுகள் (2) சிதைவுகள் (3) நினைவுத் தூபிகள் (4) நாணயங்கள்

**2.** பின்வருவனவற்றுள் இந்நாட்டின் பிராமி கல்வெட்டுகளில் அதிகளவு குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல் எது?
(1) பிக்குமார்களுக்கு குகைகளைக் கையளித்தல்
(2) அரசின் சட்டங்களைப் பொதுமக்களுக்கு அறிவித்தல்
(3) வரி சேகரித்தல்
(4) விகாரைகள் ஆராமைகளை நிர்வகித்தல்

**3.** வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் தொழினுட்பம் பற்றி அறிந்து கொள்வதற்கான தகவல் வழங்கும் ஒரேயொரு மூலாதாரம்
(1) மயானங்கள் (2) வீடுகள் (3) கல்லாயுதங்கள் (4) மட்பாண்டங்கள்

**4.** ஆரம்ப வரலாற்றுக்கால மனிதர்கள் ஆற்றங்கரைகளுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களை வசிப்பதற்குத் தெரிந்தெடுப்பதற்கான காரணம் யாது?
(1) வெள்ளப்பெருக்குத் தொல்லையிலிருந்து பாதுகாப்பாயிருத்தல்
(2) விவசாயத்துக்குப் பொருத்தமான வசதிகள் நிலவுதல்
(3) வனவிலங்குகளிலிருந்து பாதுகாப்பாக இருத்தல்
(4) போக்குவரத்து வசதிகள் இலகுவாயிருத்தல்

● பின்வரும் **5** ஆம் **6** ஆம் வினாக்களுக்கு A, B, C, D என்ற கூற்றுகளைக் கொண்டு விடை தருக.
A - குளங்களை மையமாகக் கொண்டு குடியிருப்புகள் தோன்றுதல்
B - ஒழுங்குமுறையான மரணச் சடங்குகளைப் பின்பற்றுதல்
C - பல்வேறு தொழில்களுக்கு ஏற்றவாறு குடியிருப்புகள் தோன்றுதல்
D - விவசாய நடவடிக்கைகள் ஆரம்பமாகுதல்

**5.** முன் வரலாற்றுக் காலத்துடன் தொடர்புடைய சரியான கூற்றுகள்
(1) A உம் C உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

**6.** ஆரம்ப வரலாற்றுக் காலத்துடன் தொடர்புடைய சரியான கூற்றுகள்
(1) A உம் C உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

**7.** வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் உணவாகக் கொண்ட பல்வேறு சிப்பி வகைகள் பெருமளவில் காணப்பட்ட சுற்றாடல் வலயம் எது?
(1) தாழ்நில உலர் வலயம் (2) தாழ்நில ஈர வலயம்
(3) வறள் வலயம் (4) மலைநாட்டு உலர்வலயம்

[பக். 2 ஐப் பார்க்க

**8.** நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்கள் நிரல் II இல் தரப்பட்டுள்ளன. நிரல் I உடன் நிரல் II இனை ஒழுங்குமுறையில் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. சிகிரிய கோட்டையை அமைத்தல் | A - தேவநம்பியதீசன் |
| 2. பருமகமாரை அரசின் உயர் பதவிகளில் நியமித்தல் | B - வலகம்பாகு |
| 3. ஸ்ரீமகாபோதி மரக்கிளைகள் நாட்டின் பல பிரதேசங்களிலும் நடப்படுதல் | C - முதலாம் காசியப்பன் |
| | D - துட்டகைமுனு |

(1) A, B, C (2) C, B, D (3) C, D, A (4) D, A, B

**9.** பின்வருவனவற்றுள் வசபன், மகாசேனன், பராக்கிரமபாகு ஆகிய மன்னர்கள் பற்றிய பொதுவான விடயம் எது?
(1) நாட்டை ஒன்றிணைத்தல்
(2) வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்
(3) பாரிய தாதுகோபங்கள் விகாரைகளை நிர்மாணித்தல்
(4) நீர்ப்பாசனக் கைத்தொழில் விருத்திக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

**10.** நாட்டின் அரசியல் ஆதிக்கத்தை மத்தியமயப்படுத்தும் போது
(1) ஒன்றிணைந்த அரசு தோன்றும்.
(2) நாட்டில் பிரிவினை ஏற்படும்.
(3) வெளிநாட்டு அரசுக்கு உட்படுத்தப்படும்.
(4) குடியேற்றங்கள் உரித்தாகும்.

**11.** அனுராதபுரக் காலத்தில் இந்நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பெருமளவிலான வியாபார ஒழுங்கமைப்புக்கள் உரித்தாக இருந்தது
(1) வட இந்தியர்களுக்கு (2) தென் இந்தியர்களுக்கு
(3) சீன இனத்தவர்களுக்கு (4) பாரசீக இனத்தவர்களுக்கு

**12.** ‘வெஜ்ஜசாலா’ என்றால் என்ன?
(1) வைத்தியசாலைகள் (2) இந்து சமய நிலையங்கள்
(3) நாடக அரங்குகள் (4) கல்வி நிலையங்கள்

**13.** மகாவலி கங்கையின் கிளை ஆறு எது?
(1) மாணிக்க கங்கை (2) அம்பன் கங்கை (3) தெதுறு ஓயா (4) கலா ஓயா

- பின்வரும் A, B, C, D என்ற கூற்றுகளைக் கொண்டு **14** ஆம் **15** ஆம் வினாக்களுக்கு விடை தருக.
  A - தரைக்கு செங்குத்தாக சுவர் கட்டுதல்
  B - பதப்படுத்தப்பட்ட களிமண்ணைப் பயன்படுத்துதல்
  C - மயானக் கல்லறையில் களிமண் குழாய் பொருத்துதல்
  D - களிமண் பாத்திரத்தில் உமியை நிரப்பி சுடுதல்

**14.** முற்காலத்தில் வீடு கட்டும் தொழினுட்பம் பற்றி அறிந்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்தும் கூற்று எது?
(1) A (2) B (3) C (4) D

**15.** முற்காலத்தில் எரிப்பதற்கு வளி அவசியம் என்பதை அறிந்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்தும் கூற்று எது?
(1) A (2) B (3) C (4) D

**16.** முற்காலத்தில் அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவை அலகுகள் **நிரல் I** இலும் அளவிடப்பட்ட பொருள்கள் **நிரல் II** இலும் தரப்பட்டுள்ளன. **நிரல் I** இனை **நிரல் II** உடன் ஒழுங்குமுறையில் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. அமுணை | A - காலம் |
| 2. வியத | B - நிலம் (வெளி) |
| 3. தத | C - நீளம் |
| | D - நிறை |

(1) A, B, C (2) B, C, A (3) C, B, D (4) D, A, B

**17.** சிகிரி நீர்ப்பூங்காவின் நீரோடையின் உயரத்தை மாற்றுவதற்கு புராதன கட்டிட கலைஞர்கள் பயன்படுத்திய நுட்பமுறை
(1) கல் துளைகளின் விட்டத்தின் அளவுகளை சமமானதாக ஆக்கியிருத்தல்
(2) கல் துளைகளின் விட்டத்தை வெவ்வேறுபட்டதாக ஆக்கியிருத்தல்
(3) துவாரமுள்ள கல்லின் பருமனை அதிகரித்தல்
(4) துவாரமுள்ள கல்லின் பருமனைக் குறைத்தல்

**18.** புராதன இலங்கையில் நிலவிய வெளிநாட்டு வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்பட்ட நாணயம் பற்றிய சரியான கூற்று எது?
(1) எல்லா நாணயங்களும் ஒரு உலோகத்தினால் செய்யப்பட்டிருந்தன
(2) எல்லா நாணயங்களும் சமமான நிறையைக் கொண்டிருந்தன
(3) எந்தவொரு நாட்டுக்கும் உரிய நாணயமும் வியாபார கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்பட்டன
(4) சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான நாணய வகைகள் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தப்பட்டன

**19.** பின்வருவனவற்றில் சேனைப் பயிர்ச்செய்கைக்காக அரசுக்கு அறவிடப்பட்ட வரி எப்பெயரால் இனம் காணப்பட்டது?
(1) மதரமஜிபக (2) கெதி அட (3) தக்கபதி (4) போஜகபதி

**20.** பின்வருவனவற்றுள் முற்காலத்தில் உணவுக்காகப் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட தானிய வகை எது?
(1) கோதுமை (2) நெல் (3) பார்லி (4) கௌபீ

- பின்வரும் A, B என்ற கூற்றுகளைக் கொண்டு **21** ஆம் வினாவுக்கு விடை எழுதுக.
  A - இந்நாட்டின் கடைசி இராசதானி
  B - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கடைசி ஆட்சியாளன்

**21.** கண்டி இராச்சியம் தொடர்பாக
(1) A உம் B உம் உண்மையானதாகும்.
(2) A உண்மையானது என்பதுடன் B பொய்யானது.
(3) A உம் B உம் பொய்யானவை.
(4) A பொய்யானது என்பதுடன் B உண்மையானதாகும்.

**22.** போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் தொடர்பு கொண்டிருந்த இராச்சியம் எது?
(1) சீதாவாக்கை (2) றைகம (3) கோட்டை (4) கண்டி

**23.** போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண ஆட்சியாளருக்கும் இடையே எப்போதும் மோதல்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணம்
(1) தாழ்நில சிங்கள ஆட்சியாளர்களின் போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களுக்கு யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் உதவிபுரிந்தமை
(2) மன்னார் கடலில் முத்துக் குளிக்கும் நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாண ஆட்சியாளர்களால் போர்த்துக்கேயருக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டமை
(3) யாழ்ப்பாண சிம்மாசனத்துக்கு வாரிசு உரிமை கோரிய தமிழ் இளவரசர்கள் சிலர் போர்த்துக்கேயருக்கு ஆதரவாக தொழிற்பட்டமை
(4) யாழ்ப்பாண இராச்சியத்தில் கத்தோலிக்க மதப் பிரசாரம் செய்வதற்கு எதிராக அங்கு ஆட்சியாளர்கள் கடும் எதிர்ப்புக்காட்டியமை

**24.** மத்திய காலத்தில் ஆசியாவின் வர்த்தக ஆதிக்கத்துக்கு உரிமையைக் கொண்டிருந்தவர்
(1) உரோமர் (2) முஸ்லிம்கள் (3) இந்தியர்கள் (4) போர்த்துக்கேயர்

**25.** கொன்ஸ்தாந்தினு த சா உட்பட போர்த்துக்கேய இராணுவம் எந்தப் போரில் தோல்வியடைந்தது?
(1) தந்துரே (2) பலனை (3) ரன்தெனிகல (4) கன்னொறுவை

**26.** கைத்தொழில்மயமாதலின் காரணமாக சமூகத்தில் நிகழ்ந்த மாற்றம்
(1) பல்தேசிய கம்பனிகள் விருத்தியடைதல்
(2) வங்கிச் சேவைகள் விரிவடைதல்
(3) நகரமயமாதல் துரிதமாகுதல்
(4) பொருட்கள் சேவைகள் உற்பத்தி முன்னேற்றமடைதல்

[பக். 4 ஐப் பார்க்க

**27.** தரப்பட்டுள்ள A - E வரையிலுள்ள தகவல்களில் கைத்தொழில் புரட்சி காரணமாக ஏற்பட்ட **தீமையான** விளைவுகளை மட்டும் குறிப்பிடும் விடை எது?

A - மனித உழைப்புக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்துதல்
B - சூழல் மாசடைதல்
C - வேலைவாய்ப்பு இலகுவாதல்
D - ஊழியம் சுரண்டப்படுதல்
E - உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியடைதல்

(1) A உம் D உம் (2) B உம் D உம் (3) B உம் E உம் (4) C உம் D உம்

**28.** நிரல் I இலும் நிரல் II இலும் பிரித்தானியர் இந்நாட்டின் ஆதிக்கத்தை பெற்றுக் கொண்டமை பற்றிய சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனை பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. கியூ கடிதம் | A - வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துதல் |
| 2. சென்னை அதிகாரிகள் | B - ஒல்லாந்தருக்கு உரித்தான பிரதேசங்களை பிரித்தானியரிடம் ஒப்படைத்தல் |
| | C - கரையோரப் பிரதேசங்களை நிர்வாகம் செய்தல் |

(1) A உம் B உம் (2) B உம் C உம் (3) C உம் A உம் (4) C உம் B உம்

- பிரித்தானியரால் இலங்கைக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு **29** ஆம் **30** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்படுதல்
B - பொதுமக்கள் வாக்குரிமையினால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுதல்
C - சட்டவாக்கக் கழகம் தாபிக்கப்படுதல்
D - அரசுக் கழகம் தாபிக்கப்படுதல்

**29.** கோல்புறூக் சீர்திருத்த முன்மொழிவுகளை மட்டும் குறிப்பிடும் விடை எது?
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

**30.** டொனமூர் சீர்திருத்த முன்மொழிவுகளை மட்டும் குறிப்பிடும் விடை எது?
(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம் (4) B உம் D உம்

- பின்வரும் A, B, C, D என்ற கூற்றுக்களின் அடிப்படையில் **31** ஆம் **32** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - சிறு பிரச்சினைகள் பற்றிய வழக்குகளைத் தீர்த்தல்
B - கிராமத்தின் கால்வாய்கள், அணைக்கட்டுகளை கட்டுதலும் பராமரித்தலும்
C - சூழ்ச்சி தொடர்பான வழக்குகளை தீர்த்தல்
D - விகாரைகள், பிக்குமார் தொடர்பான வழக்குகளை தீர்த்தல்

**31.** கிராமசபைகளுக்கு (கம்சபா) உரித்தான அதிகாரத்தைக் குறிப்பிடும் விடை எது?
(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) C உம் D உம்

**32.** அரசனுக்கு உரித்தான அதிகாரத்தைக் குறிப்பிடும் விடை எது?
(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) C உம் D உம்

- பின்வரும் A, B, C, D என்று குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சோடியிலும் முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையிலுள்ள தொடர்பினை பரிசீலித்து இல **33** தொடக்கம் **35** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - 1. சிங்கோனாப் பயிர்ச்செய்கை
2. ஹூல்கந்துர தோட்டம்

B - 1. பிரித்தானியர் ஆட்சி
2. மத்தியதர வகுப்பினர்

C - 1. உழைப்புக்கு வேதனம் வழங்குதல்
2. கட்டாய உழைப்புக்கான இராஜகாரிய முறை

D - 1. ஹெமீலியா வெஸ்டாக்ஸ்
2. கோப்பிப் பயிர்ச் செய்கை

**33.** முதலாவதின் விளைவாக இரண்டாவது அமைந்ததைக் குறிப்பிடும் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

**34.** இரண்டாவது ஒழிக்கப்பட்டதும் முதலாவது ஆரம்பமானது என்பதைக் குறிப்பிடும் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

**35.** முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையில் எத்தகைய தொடர்பையும் குறிப்பிடாத சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

**36.** பின்வரும் A, B, C, D என்பவற்றில் தரப்பட்டுள்ள விடயங்களில் அமெரிக்கப் புரட்சி மற்றும் பிரான்சியப் புரட்சி என்ற இரண்டுக்கும் காரணமான பொது விடயமாக உள்ளது எது?

A - ஆட்சியாளர்களின் ஆடம்பர வாழ்க்கை
B - நியாயமற்ற வரிகள் விதித்தல்
C - தத்துவக் கருத்துக்களின் செல்வாக்கு
D - மானியமுறை சமுதாய முறைமையின் செல்வாக்கு

(1) A (2) B (3) C (4) D

**37.** பெருமளவிலான சிறிய அரசுகளை ஒன்றிணைத்து ஜெர்மனி என்ற பலம் வாய்ந்த அரசினை உருவாக்கிய தலைவன்

(1) இரண்டாம் வில்லியம் (கெய்சர்) (2) வொன் வோல்க்
(3) ஒட்டோ வொன் பிஸ்மார்க் (4) அடொல்ப் ஹிட்லர்

**38.** புரட்சிக்கு முன்னர் ரஷ்யர்கள் மிகக் கடுமையான உணவுப் பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க நேரிட்டது

(1) காணிகளின் உரிமை பிரபுக்களுக்கு உரித்தாயிருந்தமையினால்
(2) மானியமுறை பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையினால்
(3) விவசாயிகள் இராணுவ சேவையில் சேர்க்கப்பட்டமையினால்
(4) அறுவடையின் ஒரு பகுதியை வரியாகச் செலுத்த நேர்ந்தமையால்

**39.** “இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றாவிட்டால் வரலாறு எங்களுக்கு இரக்கம் காட்டமாட்டாது.” இந்தக் கூற்று எந்தப் புரட்சியுடன் தொடர்புடையது?

(1) அமெரிக்க புரட்சி (2) பிரான்சியப் புரட்சி
(3) ரஷ்யப் புரட்சி (4) சீனப் புரட்சி

**40.** உலக மக்களின் சுகாதார நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவகம் இனம் காணப்படும் சுருக்கப் பெயர்

(1) ILO (2) UNESCO (3) WHO (4) UNICEF

***

උත්තර පත්‍ර පරීක්ෂකවරුන්ගේ ප්‍රයෝජනය සඳහා පමණි

OL/2024(2025)/33/T-II

94210

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)**

| | | |
|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ பகுதி **I** இல் வினா இலக்கம் **1** கட்டாயமானது.
- ✳ பகுதி **II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- ✳ எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1. (அ)** (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

வளவ கங்கை, மகாவலி கங்கை, ஹுருளு வாவி, ரந்தெனிகல நீர்த்தேக்கம், மின்னேரிய வாவி, மினிகாகல்கந்த, மாதோட்டம், கண்டி, பருத்தித்துறை, புத்தளம், சீதாவாக்கை, கொட்டியாரக் கோட்டை (12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

ஜெர்மனி, லிஸ்பன், மலாயா தீபகற்பம், சென்னை, நாகசாகி, வடகடல் (06 புள்ளிகள்)

**(ஆ)** (i) கீழே *A*, *B*, *C*, *D* எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளை **ஒழுங்குமுறைப்படி** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - புராதன காலத்தில் மட்பாண்டங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எளிய உபகரணம் எது?

*B* - அனுராதபுர இராசதானியின் முதல் அரசன் யார்?

*C* - முதல் அச்சியந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

*D* - முதலாம் உலகப்போரின் போது ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலினால் மூழ்கடிக்கப்பட்ட பயணிகள் கப்பல் எது? (04 புள்ளிகள்)

● *A*, *B* என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க **ஒழுங்குமுறைப்படி** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. உரு *A* இல் காட்டப்பட்டுள்ளது எது?

2. இது கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

3. இது எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

4. இது எந்த வரலாற்றுக் காலப்பகுதிக்கு உரியது?



*A*

(04 புள்ளிகள்)


[பக். 2 ஐப் பார்க்க

(iii) 1. உரு *B* இல் காட்டப்பட்டுள்ளது யாது?

2. இது அமைந்துள்ள நகரம் எது?

3. இந்தக் கட்டிடம் எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

4. இதனுடன் தொடர்புடைய புரட்சி எது?



*B*

(04 புள்ளிகள்)

## பகுதி II

**2.** (i) கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரச கோட்பாட்டை பயன்படுத்திய மன்னர்களை *A, B, C* என்ற **ஒழுங்குமுறையில்** குறிப்பிடுக.

*A* - ஆண்டவன்

*B* - பர்வதராஜா (மலையின் அரசன்)

*C* - சக்கரவர்த்தி (03 புள்ளிகள்)

(ii) புராதன காலத்தில் அரசுரிமை உரித்தான **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) புராதன அரசர்கள் தங்களால் நாட்டு மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டியது எனக் கருதிய **இரண்டு** கடமைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) முதலாம் விஜயபாகு மன்னனால் செய்யப்பட்ட சேவைகளை **மூன்று** விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) புராதன இலங்கையின் மன்னர்கள் தொடர்புகளைப் பேணிய வெளிநாடுகள் **மூன்றின்** பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) புராதன மன்னர்கள் வெளிநாட்டு தொடர்புகளைப் பேணிய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) புராதன இலங்கையர் சமூகத்தில் பல்வேறு சமயங்கள் நிலவின என்பதை **இரண்டு** விடயங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) புராதன இலங்கையர் சமூகத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டவர்கள் இருந்தனர் என்பதை **மூன்று** உதாரணங்களைக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

**4.** (i) பின்வரும் இராசதானிகளின் ஆரம்ப ஆட்சியாளர்கள் யார் என்பதை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து *A, B, C* என்ற **ஒழுங்குமுறைப்படி** அவர்களின் பெயர்களை எழுதுக.

*A* - தம்பதெனிய

*B* - குருணாகலை

*C* - கோட்டை

(II ஆம் புவனேகபாகு, III ஆம் விஜயபாகு, VI ஆம் பராக்கிரமபாகு, III ஆம் விக்கிரமபாகு) (03 புள்ளிகள்)

(ii) இரண்டாம் நகரமயமாக்கல் காலப்பகுதியில் எழுதப்பட்ட **நான்கு** தூதுகாவியங்களின் பெயர் தருக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் நகரமயமாக்கல் காலப்பகுதியில் நிலவிய வர்த்தகத்தின் இயல்பு பற்றி **இரண்டு** விடயங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் நகரமயமாக்கல் காலப்பகுதியில் கட்டிட நிர்மாணத் துறையில் காணப்பட்ட சிறப்பான அம்சங்களை **மூன்று** உதாரணங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

**5.** (i) 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அதிக அளவில் கேள்வி நிலவிய இலங்கையின் வர்த்தகப் பொருள்கள் **மூன்றின்** பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) பிரித்தானியர் கண்டி இராச்சியம் தொடர்பில் கவனம் செலுத்துவதில் தாக்கம் செலுத்திய **இரண்டு** காரணங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) 1818 இல் கண்டி மக்கள் பிரித்தானியருக்கு எதிராக எழுச்சி பெறுவதில் தாக்கம் செலுத்திய **இரண்டு** காரணங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) 1818 சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான **மூன்று** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

**6.** (i) இந்து சமய மறுமலர்ச்சியின் **மூன்று** தலைவர்களின் பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) இஸ்லாம் சமய மறுமலர்ச்சிக்காக இஸ்லாமிய தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட **இரண்டு** நடவடிக்கைகளை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் கிறிஸ்தவ மிஷன்மார் தமது சமயத்தைப் பிரசாரம் செய்வதற்குப் பின்பற்றிய **இரண்டு** நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) பௌத்தசமய மறுமலர்ச்சிக்காக அதன் தலைவர்கள் பின்பற்றிய தந்திரோபாயங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

**7.** (i) சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்ட **மூன்று** விவசாயக் குடியேற்றங்களின் பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) விவசாயக் குடியேற்றங்கள் தாபிக்கப்பட்டதன் **இரண்டு** நோக்கங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) விவசாயக் குடியேற்றங்களைத் தாபிக்கும்போது எதிர்நோக்கிய **இரண்டு** சவால்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) மகாவலி அபிவிருத்தி செயற்றிட்டம் பலநோக்குத் திட்டமாகக் கருதப்படுவதற்கான **மூன்று** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி III

**8.** (i) ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில் புவி தொடர்பாக புதிய கருத்துக்களை முன்வைத்த **மூன்று** நபர்களின் பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) மேலே **8** (i) இல் நீங்கள் பெயர் குறிப்பிட்டவர்களில் இருவர் முன்வைத்த புதிய கருத்துக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட **இரண்டு** மாற்றங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சியின் விளைவாக ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

**9.** (i) முதலாம் உலக மகாயுத்தத்தில் வெற்றிபெற்ற அணிக்கு உரிய நாடுகள் **மூன்றின்** பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) முதலாம் உலக மகாயுத்தம் ஆரம்பமாவதற்கு ஜெர்மனியின் நடவடிக்கைகள் எவ்வாறு காரணமானதென்பதற்கான **இரண்டு** விடயங்களை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) முதலாம் உலக மகாயுத்தத்தில் நேச நாடுகள் அணி வெற்றி பெற்றதற்கு அடிப்படையான **இரண்டு** காரணங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) சர்வதேச சங்கம் தோல்வியடைவதில் செல்வாக்குச் செலுத்திய **மூன்று** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

* * *

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

OL/2024(2025)/33/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


**33 T II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)**

ඉතිහාසය II
வரலாறு **II**
History II

94210

**1.** (அ) (i) சுட்டெண் ..........................





இங்கே வெட்டி வேறாக்கவும்

[மறுபக்கம் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

1. (அ) (ii)




WWW.PastPapers.WiKi
Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO
www.LOL.LK

# LOL.lk BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

## සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**